# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 11 | FEBRUARY 2024 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE





சிங்கப்பூர்-மலேசியா

All Inclusive Rs.92,500* per person

01-03-2024

6 நாட்கள்

Trichy to Trichy

BOOK NOW

97 87 066 066

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

82/235, காமராஜர் சாலை, மதுரை




# முப்பெரும் விழா



QR Code-ஐ ஸ்கேன் செய்து முப்பெரும் விழா நிகழ்ச்சியை காணலாம்

To




SOWBHAGYAAS

வையம் போற்றும் வைரநகைகளின் அணிவகுப்பு சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems






Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surweillance!!!*

## A TO Z CCTV SYSTEMS

CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**



# தலைவர் அறிக்கை

அஸ்கிதெஞ்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

**T.R.மோகன்ராம்**
**தலைவர்**

ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் முப்பெரும் விழா வெகு விமரிசையாக நடந்து முடிந்தது. விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெற்ற இந்த விழாவில், வாழ்த்துரை வழங்குவதற்கு கலந்து கொண்ட முப்பெரும் அமைப்புகளின் தலைவர்கள் கூறியதை கவனத்தில் கொள்கிறேன்.

அதாவது, சென்னைக்கு அடுத்தபடியாக மதுரை பெரிய நகராமாக கருதினாலும், மதுரையின் தொழில் வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. சமீபத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மதுரை மாநகரில் எந்த ஒரு தொழில் வாய்ப்புகளும் கிடைக்காதது வருத்தமளிக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த நிகழ்விற்கு முன்பு, தூத்துக்குடி சாலையில் வர இருந்த டெக்ஸ்டைல் தொழில் பூங்கா விருதுநகருக்கு மாறியது மிகப்பெரிய வேதனை.

மதுரை மாநகரின் வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு வாய்ப்புகள் இது போல தவறிச் செல்வதும், கிடப்பில் இருப்பதுமாக உள்ளது. அந்த வகையில், எய்ம்ஸ் , நைபர், சர்வதேச விமான நிலைய அந்தஸ்து பெறுவது, தூத்துக்குடி சாலையில் தொழில் முனையம் ஆக்குவது, கானல் நீராய் இருக்கும் மதுரை ஐடி பூங்கா, எந்த ஒரு பெரிய தொழில் நிறுவனங்களும் எட்டிப்பார்க்காத நிலை என இது போல பல்வேறு காரணங்களால் மதுரை மாநகர் பின்னடைவை சந்திக்கிறது. இந்த நிலை கடந்த 15 ஆண்டுகளாகவே நிகழ்ந்து வருகிறது. இதற்கு எந்த ஒரு பாராளுமன்ற & சட்டமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுக்காமல் இருப்பது வருத்தமே.

இதே நிலை தொடர்ந்தால், மதுரை மாநகர் கோவில் நகரம் என்கிற அடையாளத்தை மட்டுமே தாங்கி நிற்கும். எந்த ஒரு பொருளாதார முன்னேற்றமும், கட்டமைப்பும் இன்றி மதுரை பின்னடைவை சந்திக்கும் போக்கு உருவாகும். மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றால் மதுரை தொழில் நகராமாக மாற வேண்டும். அதற்கு மத்திய மாநில அரசுகள் கவனம் செலுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மதுரை மாநகரின் தொழில் அமைப்புகள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கான அழுத்தத்தை அரசுக்கு கொடுத்து மதுரை மாநகரை பொருளாதார ரீதியாக உயர்த்தவும், மக்கள் வாழ்வாதாரத்தை மாற்றவும் தொழில் முனைவோர்கள், அமைப்புகள் அவசியம் ஒன்று கூட வேண்டும். நமது சேம்பர் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

SOURASHTRA CHAMBER OF COMMERCE

# BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |

| EC Members | Team-Chairmen | Contact |
|---|---|---|
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. சுபேந்திரன்



**14.01.2024** – ராஷ்ட்ரபந்து ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களின் 154வது பிறந்த நாளையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தெய்வத்திரு. ஏ.ஜி.எஸ். ராம்பாபு அவர்களின் நினைவு நாளையும் போற்றும் வகையில் ஒரு சேர மலரஞ்சலி / புகழஞ்சலி கூட்டம் காலை 10.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கு எல்.கே. துளசிராம் அவர்களின் குடும்பத்தினர் திருவாளர்கள் L.M. ஜானகிராம், L.V. சாந்தாராம் & L.V. பார்த்தசாரதி ஆகியோரும், திரு. A.G.S. ராம்பாபு அவர்களது குடும்ப உறுப்பினர்கள் திரு. கோபி & திரு. சச்சின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**21.01.2024** – ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 15வது செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

**26.01.2024** – அன்று காலை 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். சிறப்பு விருந்தினராக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) துணை இயக்குனர், ஒருங்கிணைப்பு மற்றும் செக் அவுட் பகுதி, (ஓய்வு) Dr. V.K. ஹரிஹரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

**26.01.2024** – சேம்பர்-ன் 17ம் ஆண்டு விழா, 18ம் ஆண்டு துவக்க தின விழா & 75ம் ஆண்டு குடியரசு தின விழா என முப்பெரும் விழாவாக மாலை 6 மணி அளவில் வி.எஸ். செல்லம் சரஸ்வதி அரங்கில் நடத்தப்பட்டது.

**06.02.2024** – பிப்ரவரி மாத தொழில் வர்த்தக கூட்டம் மாலை 6 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். Opportunities in NSIC and Latest Developments in GST & Practical Difficulties ஆகிய இரு வேறு தலைப்புகளில் கூட்டம் நடைபெற்றது.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், 17ம் ஆண்டு விழா, 18ம் ஆண்டு துவக்க விழா, பாரதத்தின் 75ம் ஆண்டு குடியரசு தின விழா முப்பெரும் விழாக்களை 26.01.2024 அன்று வெகு விமரிசையாக கொண்டாடியது. இந்த பொன்னான நிகழ்வில், அழைக்கப்பட்டிருந்த விருந்தினர்கள் அனைவரும் முக்கிய அமைப்புகளின் தலைவர்கள் ஆவர்.

நமது ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ், கடந்த செயற்குழு கூட்டத்தில், மதுரையின் முன்னோடி அமைப்புகளுடன் நமது சேம்பர் இணைந்தும், நம் சமூக அமைப்புகளை இணைத்துக்கொண்டும் செயல்பட வேண்டும் என்று கருதியது. அதனடிப்படையில், இந்த முப்பெரும் விழாவில், ஜே.சி.ஐ., என்.எம்.ஆர் வித்யா மந்திர், தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ், மடீட்சியா மற்றும் கப்பலூரி தொழிற்பேட்டை & சிடீஸியா ஆகிய 5 அமைப்புகளின் தலைவர்கள் விருந்தினர்களாக கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர்களும் நமது அழைப்பினை ஏற்று தவறாமல் விழாவிற்கு கலந்து கொண்டது நமது சேம்பருக்கு பெருமை. அங்கத்தனிர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த விழாவில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் அனைவருக்கும் குளுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்பட்டன. அப்பரிசுகளை அளிக்க முன் வந்த நிறுவனத்தார் அனைவருக்கும் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக இதழ் குழு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த குளுக்கல் பரிசுகளை ஏற்பாடு செய்ய பணியாற்றிய செயற்குழு உறுப்பினர்கள் திரு. T.N. சூரியபிரகாஷ், திரு. G.R. சுப்பிரமணியன், இதழ்குழு மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. M.R. முரளி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**LUCKY DRAW SPONSORS**

M/s. EAV Rengachary & Sons
M/s. TKD Enterprises Pvt. Ltd.
M/s. Vignesh Graphics
M/s. Geo Arts
M/s. Sowndarya Traders
M/s. Dasu Metals
M/s. Amar Tech
M/s. Saibaba Agencies
M/s. Aiswarya Textiles
M/s. Jayalakshmi Tex &
M/s. Jothi Krishna Iron Works



*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

# பாரத தேசத்தின் 75வது குடியரசு தின விழா கொண்டாட்டம்






பாரத தேசத்தின் 75வது குடியரசு தினத்தை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கொண்டாடியது. 26.01.2024 அன்று காலை 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். காலை சிற்றுண்டிக்குப் பிறகு குடியரசு தின சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) துணை இயக்குனர், ஒருங்கிணைப்பு மற்றும் செக் அவுட் பகுதி, (ஓய்வு) Dr. V.K. ஹரிஹரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இஸ்ரோவில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், தனது அனுபவங்களையும், இஸ்ரோவின் செயல்பாடுகள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றை குறித்துப் பேசினார்.சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் நன்றி உரையாற்றினார்.



ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 15வது செயற்குழு கூட்டம் 21.01.2024 அன்று சேம்பர்-ன் புதிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், சேம்பர்-ன் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**Sowndarya Traders**

*Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary*

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# ADISHTU
TRUSTABLE SNACKS PARTNER



## STARTUP INDIA
# ENERGY BAR




fssai
12423012002062

- NO ADDED SUGAR
- NO ADDED PRESERVATIVES
- NO ADDED CHEMICALS
- NO ARTIFICIAL SWEETNESS
- NO ARTIFICIAL FLAVORS
- NO DAIRY, SOY, GLUTEN

Ministry of Micro, Small and Medium Enterprises
Government of India
MSME
MICRO, SMALL & MEDIUM ENTERPRISES
सूक्ष्म, लघु एवं मध्यम उद्यम

MADE IN INDIA

adishtu
WWW.ADISHTU.COM

# முப்பெரும் விழா



சௌராஷ்ட்ர சேம்பர் தலைவர்
**திரு. T.R. மோகன்ராம்** அவர்களின் வரவேற்புரை



பொதுச் செயலாளர்
**திரு. K.K. குபேந்திரன்** அவர்களின் செயலாளர் அறிக்கை



சிறப்பு விருந்தினர்
**JFS. M.K. கார்த்திகேயன்**
National President 2023, Junior Chamber of International-India
அவர்களின் உரை



கௌரவ விருந்தினர்
சௌராஷ்ட்ர பெண்கள் வித்யா சங்க தலைவர்
**திரு. N.M.R.K. ஜவகர் பாபு**
அவர்களின் உரை



கௌரவ விருந்தினர்
இஸ்ரோ வின்வெளி ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற
**Dr. V.K. ஹரிஹரன்**
அவர்களின் உரை

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தனது ஆண்டு விழாவை நடத்தி வருவது வழக்கம். சௌராஷ்ட்ர சேம்பர் துவக்கப்பட்ட ஜனவரி 26ம் தேதி அன்றே இனிமேல் ஆண்டு விழா கொண்டாட செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற இருந்த ஆண்டு விழாவை முப்பெரும் விழாவாக கடந்த 26.01.2024 அன்று மாலை வி.எஸ். செல்லம் சரஸ்வதி அரங்கில் கொண்டாடியது.

17ம் ஆண்டுவிழா, 18ம் ஆண்டு சேம்பர் துவக்க விழா, குடியரசு தினத்தின் 75-ம் ஆண்டு விழா என்று மூன்று விழாவாக கொண்டாடப்பட்டது.

17ம் ஆண்டு விழாவின் சிறப்பு விருந்தினராக JFS. **M.K. கார்த்திகேயன்**, National President 2023, Junior Chamber of International-India அவர்கள் கலந்து கொண்டு தலைமைப் பண்பு குறித்துப் பேசினார். கௌரவ விருந்தினராக சௌராஷ்ட்ர பெண்கள் வித்யா சங்க தலைவர் திரு. **N.M.R.K. ஜவகர் பாபு** அவர்கள் கலந்த கொண்டு கல்வியின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். சேம்பர் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

விழாவின் இரண்டாம் நிகழ்வாக, சௌராஷ்ட்ர சேம்பர்-ன் 18ம் ஆண்டு துவக்க விழாவை கொண்டாடும் வகையில், முன்னாள் தலைவர்கள் மற்றும் உடனடி முன்னாள் தலைவர் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மூன்றாம் நிகழ்வாக, 75வது குடியரசு தினத்தில், இந்திய நாட்டின் உன்னதத் துறைகளில் ஒன்றான இஸ்ரோ வின்வெளி ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற **Dr. V.K. ஹரிஹரன்** அவர்களை நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கௌரவித்தது. அவர் தனது உரையில், இஸ்ரோவின் பெருமைகள், தொழில்நுட்ப செயல்பாடுகள் குறித்து அழகாகப் பேசினார்.

விழாவிற்கு வாழ்த்துறை வழங்குவதற்காக, தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பின் தலைவர் **Dr.N. ஜெகதீசன்** அவர்கள், மடீட்சியா அமைப்பின் தலைவர் திரு. **Rm. லட்சுமி நாராயணன்** அவர்களும், கப்பலூர் தொழிற்பேட்டை சங்க தலைவர் & டான்ஸ்டியா துணைத் தலைவர் திரு. **P.N. ரகுநாத ராஜா** ஆகியோர் கலந்து கொண்டனர்.

**Dr.N. ஜெகதீசன்** அவர்கள் பேசுகையில், மதுரை மாநகரின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகளைப் பெற தொழில் அமைப்புகள் ஒன்றிணைந்து அரசுக்கு வலியுறுத்த வேண்டும் என்று கூறினார். திரு. **Rm. லட்சுமி நாராயணன்** அவர்கள், மின் கட்டண உயர்வால் தொழில் துறைகள் சந்திக்கும் சிரமங்களை அரசு கவனத்தில் கொண்டு தீர்வு அளிக்க வேண்டும் எனக் கூறினார். திரு. **P.N. ரகுநாத ராஜா** அவர்கள், சேம்பர்-ன் செயல்பாடுகளைப் பாராட்டி, மதுரை மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு மேற்படி இருவரின் கருத்துக்களை வழிமொழிந்துப் பேசினார்.

இந்தப் பொன்னான விழாவில் வருகை தந்த அங்கத்தினர்களுக்கு குளுக்கல் முறையில் பரிசுகளும் வழங்கப்பட்டன. பரிசுகளை வழங்க முன்வந்த நிறுனத்தார்கள் அனைவருக்கும் சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.





தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத் தலைவர்
**Dr. N. ஜெகதீசன் அவர்கள்**
வாழ்த்துரை வழங்குகிறார்



மடீட்சியா சங்கத் தலைவர்
**திரு. Rm. லட்சுமி நாராயணன் அவர்கள்**
வாழ்த்துரை வழங்குகிறார்



கப்பலூர் தொழிற்பேட்டை சங்கத் தலைவர்
**திரு. P.N. ரகுநாத ராஜா அவர்கள்**
வாழ்த்துரை வழங்குகிறார்



ஸௌராஷ்ட்ர சேம்பர் துணைத் தலைவர்
**திரு. K.K. தினேஷ் அவர்கள்**
18ம் ஆண்டு துவக்கம் மற்றும் முன்னாள் தலைவர்களை
வரவேற்றுப் பேசிகிறார்.



முப்பெரும் விழாவின் முக்கிய நிகழ்வு - 18ம் ஆண்டு துவக்க விழாவில்
ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்
**முன்னாள் தலைவர்களை அங்கீகரிக்கும் நிகழ்வு**



முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த
**சேம்பர் அங்கத்தினர் பெருமக்கள்**



விழாவில் பங்கேற்ற அங்கத்தினர்களுக்கு
**குலுக்கல் முறையில் பரிசுகள்** வழங்கப்படும் நிகழ்வு


ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்

# ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில்
டெலிவரி செய்யப்படும்
98430 72626
98425 72626
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9

# February Month Program








**Topics on**

**Opportunities through NSIC**

**Latest Developments in GST & Practical Difficulties**

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் பிப்ரவரி மாத தொழில் வர்த்தக கூட்டம் கடந்த 06.02.2024 அன்று சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இரு வேறு தலைப்புகளில் இந்த மாதாந்திர வர்த்தக கூட்டம் நடைபெற்றது. Opportunities through NSIC என்கிற தலைப்பில் திரு.**S.செந்தில் குமார்** General Manager, NSIC, Madurai அவர்களும், Latest Developments in GST & Practical Difficulties என்கிற தலைப்பில் திரு. **C. சத்ய நாராயணன்** Manager, BSL & Associates அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள். இந்த கூட்டத்திற்கு சேம்பர் துணைத் தலைவர் திரு. **K.K. தினேஷ்** அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. **K.K. குபேந்திரன்** அவர்கள் கூட்டத்திற்கு நன்றியுரை வழங்கினார்.




## சிறப்பு சந்திப்பு

*ஜனவரி மாத இதழ் வெளியீடு*




லாப் ஸமாச்சார்-ன் ஜனவரி 2024 மாத இதழ் மதுரை மடீட்சியா அமைப்பின் தலைவர் திரு. Rm. **லட்சுமி நாராயணன்** அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. ஜனவரி மாதம் நடைபெற்ற மேன்-இன்-மதுரை கண்காட்சியில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் குழுவாக கலந்து கொண்டு மடீட்சியா அமைப்பின் தலைவரை சந்தித்து இதழை வெளியீடு செய்தனர். இந்த சந்திப்பிற்கு உதவிய ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் முன்னாள் தலைவர் திரு. **கே.கே.ஜி. பிரபாகரன்** அவர்களுக்கு இதழ் குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

நூற்றாண்டு கால பட்டு பாரம்பரியம்
**SRB SILKS HOUSE**
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

**SRB FINSERVE PVT.LTD.**
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

**SRB RETAIL LLC.**
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

**SRB MULTI PURPOSE HALL**
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

**EXPRESS BRIYANI**
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

**KEESHTU BOLI & SNACKS**
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

**SRB CATERING**
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

**SWASI NATURO CURE HOSPITAL**
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஎா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

# மத்திய அரசின் – இடைக்கால பட்ஜெட் 2024



- வருமான வரி விதிப்பு விகிதங்களில் எந்த மாற்றமும் இல்லை
- ஏழு லட்சம் வரையிலான தனிநபர் வருமானத்திற்கு வரி செலுத்தத் தேவையில்லை.
- நேரடி மற்றும் மறைமுக வரி, இறக்குமதி வரி விதிப்பிலும் எந்த மாற்றங்களும் இல்லை.
- ரூ. 25000 வரையிலான வரி தொடர்பான பழைய வழக்குகள் ரத்து செய்யப்படும். இதன்மூலம் ஒரு கோடி பேர் பயனடைவர்.
- மாநிலங்களுக்கு வழங்கப்படும் 50 ஆண்டுகளுக்கான வட்டி இல்லா கடன் உதவி வழங்கும் திட்டதின் மூலம் நடப்பாண்டில் 1.3 லட்சம் கோடி வழங்கப்படும்.
- கார்ப்பரேட் வரி 22% ஆக குறைப்பு.
- மாதாந்திர ஜிஎஸ்டி சராசரி வசூல் ரூ. 1.66 லட்சம் கோடியாக உள்ளது.
- வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கை 8 கோடிக்கு மேல் இருக்கிறார்கள். இதன் காரணமாக நாட்டின் நேரடி வரி வருவாய் என்றைக்கும் இல்லாத அளவுக்கு அதிகரிப்பு.
- 10 வருடங்களில் 500 பில்லியன் டாலருக்கு அதிகமாக அந்நிய முதலீடுகள் இந்தியாவுக்கு வந்துள்ளது.
- உள்கட்டமைப்பு செலவு ரூ. 11.11 லட்சம் கோடியாக அதிகரிப்பு.
- அடுத்த 5 ஆண்டுகளில் கிராமப்புறங்களில் 2 கோடி வீடுகள் கட்டித்தரப்படும்.
- வீட்டின் மொட்டை மாடியில் சோலார் அமைத்தால் 300 யூனிட் மின்சாரம் இலவசம்.



- கர்ப்பப்பை புற்றுநோய் தடுக்க தடுப்பூசி திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- ஊட்டச்சத்து குறைபாடுகளை சரிசெய்ய புதிய செயலி அறிமுகம் செய்யப்படும்.
- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்களை ஊக்குவிக்க ரூ. 1 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.
- பால் உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.
- நாடு முழுவதும் மின்சார வாகனங்களுக்கு பேட்டரி சார்ஜிங் மையங்கள் அதிகரிக்கப்படும்.



- தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்களை ஊக்குவிக்க ரூ. 1 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- 40000 சாதாரண ரயில் பெட்டிகள் வந்தே பாரத் ரயில் பெட்டிகளாக தரம் உயர்த்தப்படும்.
- 3 சரக்கு பொருளாதார ரயில்வே வழித்தடம் விரைவில் அமைக்கப்படும்.
- பெருநகரங்களில் மெட்ரோ ரயில் சேவை விரிவாக்கத்துக்கு முன்னுரிமை
- தொழில் தொடங்க வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கான ரூ. 1 லட்சம் கோடியில் புதிய நிதியம் அமைக்கப்படும்.
- நடுத்தர வர்க்கத்தினருக்கான வீட்டு வசதி திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- லட்சத்தீவில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- வேகமாக உயர்ந்து வரும் மக்கள் தொகையால் ஏற்படும் சவால்களை கண்டறிய உயர் அதிகாரிகளை கொண்ட குழு அமைக்கப்படும்.



- ஆன்மிக சுற்றுலாவுக்கு பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்படும். இதனால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்க திட்டம்.
- 3 கோடி பெண்களை லட்சாதிபதிகளாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 3 கோடி பெண்கள் லட்சாதிபதிகளாக்கப்படுவர்.
- விமான நிலையங்கள் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும்.
- கடல் உணவுகளின் ஏற்றுமதி கடந்த 10 ஆண்டுகளில் இரட்டிப்பாகியுள்ளது. 5 மீன்வள பூங்காக்கள் அமைக்கப்படும்.
- பிரதான் மந்திரி காப்பீட்டின் மூலம் 4 கோடி விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர்.




# மடீட்சியா தலைவருடன் ஒரு சிறிய நேர்காணல்



மதுரை மாநகரின் முன்னோடி தொழில் அமைப்பாக விளங்கும் மடீட்சியாவின் தலைவர் திரு. இராம. லெட்சுமி நாராயணன் அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் லாப் ஸமாச்சார் இதழ் குழு சிறிய பேட்டியை கண்டது. அதன் அனுபவப் பகிர்வை காணலாம்.

திரு. இராம. லெட்சுமிநாராயணன் அவர்கள், ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ் என்ற ஆப்செட் அச்சு நிறுவனத்தை 1976ல் இருந்து நடத்தி வருகிறார். மடீட்சியாவில், 1992ம் ஆண்டு உறுப்பினராக இணைந்தார். இந்த அமைப்பில், தாம் இணைந்த சமயம் 300 உறுப்பினர்களே இருந்தனர். இன்று, 1500 நேரடி உறுப்பினர்களும், 7500 மறைமுக உறுப்பினர்களும் அடங்கிய மிகப்பெரிய சேவை அமைப்பாக உருவாகியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்தார்.

மடீட்சியா அமைப்பின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பேராதரவுடன் தலைவராக தாம் பொறுப்பேற்றுக்கொண்டதற்கு தம் முயற்சியில் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான சேவைகளை செய்து வருவதாகத் தெரிவித்தார். முக்கியமாக, உறுப்பினர்களுக்கான M-Connect Plus என்ற ஆப் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் உறுப்பினர்களை ஒன்றிணைப்பதும், அவர்களின் தயாரிப்புகளை உலகறியச் செய்திட தாம் முயற்சி மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

மேலும், மதுரை ஒரு தொழில் மாநகரம் என்பதை அரசு முதல் அனைவரும் அறிய வேண்டும். நான்கு வழிச்சாலை, பன்நாட்டு விமானசேவை, ரயில்வே பார்சல் சேவை, அருகில் துறைமுகம், 30க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில் இருந்து வெளிவரும் மாணவ மாணவிகளுக்கு, வேலை வாய்ப்புகள் தர பல ஐடி நிறுவனங்கள் மதுரை நோக்கி வர இருக்கின்றன. இவ்வளவு வசதிகள் உள்ள மதுரையை தமிழகத்தின் இரண்டாம் தலைநகராக வரவேண்டும் என்று கூறினார்.

மடீட்சியாவின் முன்னாள் தலைவர்கள் தமக்குக் கற்றுக்கொடுத்த தலைமைப்பண்புடன் தமது பணியை செய்து வருவதாகக் கூறியதோடு எங்களின் சிறிய பேட்டி நிறைபெற்றது.

# மூன்றாம் தரப்பு காப்பீடு ஏன் அவசியம்

பொதுவாகவே இருசக்கர வாகன விபத்துகள் மோசமானதாகவும், பாதிக்கப்படுபவர்கள் அதிக விலை கொடுப்பதாகவும் இருக்கலாம். செலவுகள் திடீரென அதிகரிக்கலாம். காப்பீடு இல்லாமல், விபத்தில் சிக்கிய இருசக்கர வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது விபத்து ஏற்பட்டால் மருத்துவச் செலவுகளை ஈடுசெய்வதற்கு நாமே நிதிப் பொறுப்பை ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். ஆனால், இருசக்கர வாகனக் காப்பீடு எடுத்திருந்தால், ஒருவர் விபத்தில் சிக்கிய வாகனத்தின் செலவுடன் உடலில் ஏற்படும் காயங்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்கும்.

**விரிவான இருசக்கர வாகனக் காப்பீடு** என்பது திருட்டு, வன்முறையில் சேதம், இயற்கை பேரழிவுகள் மற்றும் விபத்துகள் போன்ற பல்வேறு அபாயங்களுக்கும் பாதுகாப்பை வழங்குகிறது. இதன்மூலம், விபத்தில் சிக்கினாலும் முழு நிதிச் சுமையையும் நாமே ஏற்க வேண்டிய அவசியமில்லாமல் காப்பீட்டின் அடிப்படையில் வாகனத்தை பழுதுபார்த்துக்கொள்ளலாம் அல்லது புதியதை வாங்கிக்கொள்ளலாம்.

**மூன்றாம் தரப்பு காப்பீடானது**, ஒருவர் விபத்தினால் மற்றவருக்கு பாதிப்பை ஏற்படுத்தும்போது அவர்களையும் அவர்களின் சொத்துக்களையும் பாதுகாக்க உதவுகிறது. ஒருவர் விபத்தில் சிக்கியிருந்தால், அது அந்த நபரின் தவறு எனத் தெரியவந்தால் மூன்றாம் தரப்பினருக்கு நீங்கள் ஏற்படுத்தும் சேதங்கள் அல்லது காயங்களுக்கு இந்த வகை காப்பீடு பயனளிக்கும். இதில் மருத்துவக் கட்டணம், வாகனம் அல்லது சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் ஏதேனும் வழக்குத் தொடரப்பட்டால் சட்டக் கட்டணங்கள் ஆகியவற்றை இந்த காப்பீடு ஏற்கும். இது ஒரு சட்டப்பூர்வத் தேவை.

ஒருவேளை, மூன்றாம் தரப்பு காப்பீடு போதுமான பாதுகாப்பை அளிக்கவில்லை என்று கருதினாலோ அல்லது கூடுதல் பாதுகாப்புப் பெற விரும்பினாலோ விரிவான காப்பீட்டை பயன்படுத்திக்கொள்ளலாம்.

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

Platinum Jubilee Project of Sourashtra Girls Vidya Sangam.

# NMR VIDYA MANDIR

( CBSE Syllabus )

No. 4, Panagal Street, Annupanadi Main Road, Teppakkulam, Madurai - 625 009.

**NMRKJawahar Baapu -** Founder& President

**Contact : 73391 25951**



**Admission Open for Pre-KG To VI Grade**



C B S E

Teaching is Our Passion & Your Child is Our Priority

## SALIENT FEATURES

- ❐ Ambidextrous Calligraphy
- ❐ Good Infrastructure
- ❐ Play Way Teaching Method
- ❐ Transport Facility Available
- ❐ Storytelling
- ❐ Drawing
- ❐ Yoga
- ❐ Music
- ❐ Global Exposure
- ❐ Certified Teachers
- ❐ Eco-Friendly Environment
- ❐ Smart Classroom
- ❐ Attractive Kindergarteners
- ❐ Play Area
- ❐ Indoor & Outdoor Games

**CBSE SCHOOL IN THE CENTRE OF THE CITY**

Sister Institutions : Sourashtra Primary School
Sourashtra Girls Higher Secondary School
Madurai Gandhi NMRSUBBARAMAN College for Women

# ஜி.எஸ்.டி., பக்கம் GST News & Updates

## ஜிஎஸ்டி – சமீபத்திய டிஜிட்டல் மாற்றங்கள்

ஜனவரி ஒன்றாம் தேதியில் இருந்து ஜிஎஸ்டி நடைமுறையில் சில மாற்றங்களை சத்தமின்றி அமல்படுத்தியுள்ளனர். அதாவது, ஜிஎஸ்டி பதிவு எண் பெற்ற வணிகர் தன் கடை, குடோன்களில் நிறுவனத்தின் பெயர், ஜிஎஸ்டி பதிவு எண் ஆகியவற்றை மாநில மொழி மற்று; ஆங்கிலத்தில் தெளிவாக பதிவு செய்திருக்க வேண்டியது கட்டாய நடைமுறைக்கு வந்துள்ளது.

வருமான வரிமுறையில் உள்ளதைப்போல் கிரடிட் / டெபிட் கார்டுகள் வழியாக ஜிஎஸ்டியில் வரியை செலுத்தும் நடைமுறை வந்துவிட்டது.

இ–இன்வாய்ஸ், இ–வே பில் ஆகியவை அச்சிடப்பட்ட காகிதங்களாக இல்லாமல், ஸ்மார்ட் போன், டேப் ஆகியவற்றில் டிஜிட்டல் வடிவங்களாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளும் நடைமுறை வந்துள்ளது.

இ–இன்வாய்ஸ் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்ட வணிகர், இ–இன்வாய்ஸ் தயாரிக்காமல், ஜிஎஸ்டிஆர் 1 படிவம் தாக்கல் செய்யும்போது, சரக்கு கொள்முதல் செய்யும் வணிகருக்கு, இந்த கொள்முதல் ஜிஎஸ்டிஆர் 2ஏ காலத்தில் மட்டுமே காண்பிக்கும். அதே நேரத்தில் 2பி காலத்தில் காண்பிக்காது.

சரக்கு கொள்முதல் செய்த வணிகர், தன் கொள்முதல் மீது இன்புட் எடுக்க முடியாது.

ஜிஎஸ்டி அதிகாரிகளுக்கு என்றே பிரத்யேகமான செயலி, மேம்படுத்தப்பட்ட வடிவத்தில் அறிமுகமாகியுள்ளது. இந்த செயலி வழியாக பல்க் செக் என்ற தேர்வைப் பயன்படுத்தி அதிகாரிகள் சோதனை செய்யலாம்.

இதன்படி, ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட வாகன எண்ணைப் பயன்படுத்தி 2 இ–வே பல்–ஐ வணிகர் தயஸரித்து இருந்தால், இந்த செயலி காட்டிக் கொடுத்துவிடும்.

ஒரே இன்வாய்ஸ்–ல் பல இ–வே பில் தயாரித்தாலும், இந்த செயலி காண்பித்துக் கொடுக்கும். எனவே, வணிகர்கள் கவனமாக செயல்பட வேண்டும்.

அதிகாரிகள் மேம்படுத்தப்பட்ட தங்கள் செயலி வழியாக சோதனைகள் நடத்தும்போது, தவறுகள் நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், கள ஆய்வு, அபராதம் உட்பட பல சிக்கல்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

ஆண்டு விற்பனைத் தொகை 5 கோடி ரூபாய்க்கு மேல் உள்ள வணிகர்கள் தங்கள் பி2பி இன்வாய்ஸ்–ல், 6 இலக்கம் கொண்டு எச்எஸ்என் குறிப்பிட வேண்டும் என்ற நடைமுறை, பிப்ரவரி முதல் நடைமுறைக்கு வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

## ஜிஎஸ்டி – கேள்வி பதில்

**கேள்வி:** இ–இன்வாய்ஸ் போடும்பொழுது யூனிட் 5 Bag என்பதற்கு பதிலாக 5 கிலோ என பதிவிட்டுவிட்டோம். இதை எவ்வாறு சரி செய்வது ?

**பதில்:** ஒருமுறை இ–இன்வாய்ஸ் Generate செய்துவிட்டால் மீண்டும் Edit செய்ய கூடாது. 24 மணி நேரத்திற்குள் Cancel செய்யலாம். இல்லையெனில் Credit Note போட்டு வேறு Bill Generate செய்யலாம்.

**கேள்வி:** இ–இன்வாய்ஸ் கேன்சல் செய்துவிட்டேன். Status கேன்சல் என்று வந்துவிட்டது. ஆனால் sales ledger சென்று பார்த்தால் கேன்சல் செய்யப்பட்ட இன்வாய்ஸ் கேன்சல் என்று வராமல் அத்தொகையுடன் தான் வருகிறது.

**பதில்:** 24 மணி நேரத்தில் கேன்சல் செய்தால் தான் கேன்சல் ஆகும். ஒரு நிமிடம் தாண்டினாலும் கூட கேன்சல் ஆகாது. Credit Note தான் போட வேண்டும்.

**கேள்வி:** நான் ஒரு வணிகர். உத்யோக் ஆதார் எடுத்துள்ளேன். என்னுடைய Supplier–ம் உத்யோக் ஆதார் எடுத்துள்ளார். Sec. 43b(h) apply ஆகுமா?

**பதில்:** இதற்கு தெளிவான விளக்கம் இதுவரை இல்லை. ஏனென்றால் 98% பேர் MSME–ல் வந்துவிட்டார்கள். ஆகவே தற்சமயம் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்ன வென்றால். MSME Certificate உள்ள தயாரிப்பாளர்களிடம் வாங்கி இருந்தால் அல்லது Job Work செய்பவர்களிடம் வாங்கி உடனடியாக Settle செய்துவிட வேண்டும்.

**கேள்வி:** சமாதான திட்டத்தில் மேல் முறையீடு செய்ய முடியுமா?

**பதில்:** சமாதான திட்டம் Sec. 11 & Rule 6 படி Additional Commissioner (Non-GST), Chennai அவர்களிடம் உங்கள் மனு முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டாலோ அல்லது கூடுதல் தொகை கேட்கப்பட்டாலோ, ஆணை பெறப்பட்ட 30 நாட்களுக்குள், (சலுகை மேலும் 30 நாட்கள்) அப்பில் செய்துகொள்ள முடியும்.



PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care






PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# SECTION 43B(h) A new clause (h)

A new clause (h) is introduced in section 43B of the Income Tax and we have to follow this for this financial year 2023-24. A question and answer format is given below for better understanding of the section:

1. What does section 43B(h) say:

Any sum owed by an assesse to a micro small enterprise, that is outstanding beyond the time limit specified in section 15 of the MSMED Act, 2006, shall be allowed only in the previous year in which such sum is paid. The Status of Micro or Small enterprises (MSE) must be ascertained from your supplier of goods / services. Your MSE status is irrelevant for this.

2. What is the time limit prescribed in section 15 of MSMED Act?

- ✦ When there is no agreement between the buyer and the seller; payment to be done within 15 days of purchase / availing the service.
- ✦ When there is an agreement; payment to be done within the time-limit decided by buyer and seller which can be maximum 45 days.

3. Let's understand with example:

- ✦ Purchases done from MSE seller on 01.03.2024. No agreement regarding credit period. Time allowed for payment will be 15 days. If amount is outstanding on 31.03.2024, purchase will be disallowed.
- ✦ Purchase done from MSE seller on 01.03.2024. Seller and buyer agreed for a credit period of 40 days. The expenses will be allowed even if payment is outstanding as on 31.03.2024
- ✦ Purchase done from MSE seller on 01.02.2024. Seller and buyer agreed for a credit period of 90 days. As per MSMED Act payment must be made within 45 days. If the amount is outstanding on 31.03.2024, expenses will be disallowed.

4. Key clarifications:

The Provisions is applicable from AY 2024-25. Purchase done in FY 2023-24 will be covered. Purchase from Medium Enterprises not covered. Applies only to purchase from manufactures and service providers. (Applicability to Traders is pending clarification). Does not apply to purchase made before 01.04.2023, no disallowance even if unpaid by 31.03.2024. Even if payment is made before ITR filing, it will be allowed only in the year of payment. Not applicable to the buyer opting for presumptive taxation. Applicable for all the buyers whether MSME or non-MSME. It is Imperative to ensure timely payment to all such creditors to avoid incurring a substantial additional tax liability.

5. Action Points for Buyers :

- ✦ Send a letter to verify your suppliers' MSE status' (Ask for their Udyam certificate, if applicable)
- ✦ Maintain a separate MSE supplier database, tracking due dates and payments.
- ✦ Please take serious care that No MSE creditors outstanding exceed 15/45 days as on 31.03.2024
- ✦ Pre-agree on payment terms for purchase & services from the suppliers.
- ✦ Regularly monitor payments and outstanding to MSE Suppliers.

6. Guidelines for sellers:

- ✦ Display Udyam registration number on invoices; inform buyers of your MSE status.
- ✦ Specify a credit period up to 45 days on invoices it self, if you agree for it.

Conclusion:

- ✦ These changes must be taken care by the assesses who are purchasing goods from manufactures (or) availing services from Micro or Small enterprises. You may ignore this New Provision, if you purchase goods / availing services from Medium Enterprises.

இப்போது எனது வாடிக்கையாளர் குறு,சிறு தொழில் அடிப்படையில் MSME Certificate வைத்து உற்பத்தி செய்து சப்ளை செய்து வருகிறார். இவரிடம் வாங்கும் தயாரிப்பாளர்கள் சிலர் பொருளை வாங்கி மறுபடியும் வேறு வணிகர்களுக்கு வியாபாரம் செய்பவர்கள். இவர் MSME Certificate வைத்திருக்கும் சிறு தொழில் முனைவர். இவரிடம் வாங்குபவர் Manufacture அல்லது Trader ஆக யார் வேண்டுமானாலும் இருக்கலாம். இவர் MSME உள்ள Micro அல்லது Small நிறுவனம். ஆகவே இவரிடம் வாங்கியவர்கள் அதற்கான Payment 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் அல்லது Agreement இருந்தால் 45 நாட்களுக்குள் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்காத பட்சத்தில் இன்றைய வங்கி வட்டி விகிதம் 6.5% போல மூன்று மடங்கு அதிகமாக 19.5% கணக்கிட்டு வட்டி கொடுக்க வேண்டும். சரி, இனி இந்த மாதத்தில் வாங்குவோர் ஏற்கனவே வாங்கியதற்கும் கொடுக்க வேண்டும். ஆக அனைத்து payment-ம் இந்த ஆண்டின் மார்ச் மாத்திற்குள் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் வாங்கியவர் Manufacture or Trader யாராக இருந்தாலும் அவர்கள் Balance Sheet-ல் இது Sundry Creditors ஆக காட்டப்படக்கூடாது. அப்படி காட்டப்பட்டால் அது Disallow ஆகி Income ஆக Declare ஆகி விடும். அந்த தொகைக்கு வருமான வரி வரும். சரி இப்போ, நமது வாடிக்கையாளர் இது போல MSME-க்குட்பட்ட சிறு தொழில் முனைவரிடமிருந்து வாங்கவில்லை Traders, Distributor, Stockist போன்ற Traders களிடமிருந்து வாங்கியிருந்தல் இந்த சட்டம் பாதிக்காது.





சிங்கப்பூர்
மலேசியா
6
நாட்கள்
All Inclusive
Rs.92,500
+5% GST
29-02-2024
இயற்கை எழில் மிகுந்த
8
நாட்கள்
பூடான்
Ladies Special
All Inclusive
Rs.65,800
+5% GST
06-03-2024
8
நாட்கள்
ஜப்பான்
Tradtional and Technology
All Inclusive
Rs.2,98,000
+5% GST
29-04-2024
பூமியின் சொர்க்கம்
6
நாட்கள்
காஷ்மீர்
All Inclusive
Rs.65,700
+5% GST
28-03-2024
www.vedhavalliholidays.com
99430 31237
VH
VEDHAVALLI
HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
82, காமராஜர் சாலை, மதுரை

# கேள்வி - பதில் போட்டி

இந்த கேள்வி பதில் போட்டியில், சரியான விடையளிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் முதல் மூன்று நபர்களுக்கு பரிசளிக்கப்படும். கீழ்காணும் கேள்விகளுக்கான தங்களின் பதிலை எழுதி புகைப்படம் எடுத்து, **93441 97952** என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்யவும். குலுக்கல் வென்றவருக்கு வீடு தேடி பரிசு வந்து சேரும்.

1. குடியரசு தின விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினரின் பெயர்?

......................................................................................................

2. சேம்பர்-ன் முப்பெரும் விழா நடைபெற்ற தினம்

......................................................................................................

3. இவர் ஸௌராஷ்ட்ரா பெண்கள் வித்யா சங்கத்தின் தலைவர்

......................................................................................................

4. எத்தனைத் தலைப்புகளில் இந்த பிப்ரவரி மாத கூட்டம் நடைபெற்றது?.

......................................................................................................

5. வீட்டின் மொட்டை மாடியில் சோலார் அமைத்தால் எத்தனை யூனிட் மின்சாரம் இலவசம்.......................................................................

பெயர் :......................................................................................

தொழில்:......................................................................................

தொலைபேசி எண்:..........................................................................

முகவரி:......................................................................................

......................................................................................................

சேம்பர் உறுப்பினரா?: ஆம் / இல்லை ..................

## CONGRATULATIONS!!!...

| | |
|---|---|
| சென்ற மாத கேள்விக்கு சரியான விடை அளித்து குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர்களுக்கு கிடைக்கும் பரிசுகள் | திரு. கே.ஜெ. ஜெயக்குமார்<br>பில்டிங் காண்டிராக்டர் / அவனியாபுரம் / 98427 93036 |
| | திரு. எஸ்.எம். பாலகிருஷ்ணன்<br>நிதி ஆலோசகர் / வில்லாபுரம் / 98944 44946 |
| | திரு. ஜே.கே.எம். சாந்தாராம்<br>பத்திர லிகிதர் / பேலஸ் ரோடு / 99426 59073 |
| | திரு. எம்.கே. ரிஷி<br>மார்கெட்டிங் / திருநகர் / 97907 62648 |

அதிர்ஷ்டசாலிகள் நேரில் வந்து பரிசை பெற்றக்கொள்ளவும்

## திருக்குறள்

**நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப் படும்**

**பொருள்:** (செல்வமிருந்தாலும் செருக்கில்லாத அன்புடைமையால்தான் குடிப்பிறப்பு விளங்கும். செல்வம் இருந்து அன்பில்லாதவனை) ஒருவன் செல்வ நலன்களுடன் சுகமாக வாழும்போது அவனிடத்தில் அன்பில்லாத தன்மை இருக்கக் கண்டால், அவன் நல்ல குடிப்பிறப்பு உள்ளவனா என்று சந்தேகிக்க இடமுண்டு.

அதிகாரம் 96 | குடிமை (நல்ல குடிப்பிறப்பு) | ஒழிபியல்

ஸௌ. சேம்பர் குறித்து கருத்து தெரிவிக்க 93441 97952



Prop.: B.S. Rajan
• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office : No. 45, Kakkathoppu Street, Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office : 66, Kamarajar Street, Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award
www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in
தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் ஸௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist
Your Name is Your Life
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட' முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai
For Appointment 98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்

**JSW Steel**





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



## உமா நகர்

அரசு அனுமதி பெற்ற வீட்டு மனைகள் விற்பனைக்கு

தொடர்புக்கு: திரு. S.A. உதயகுமார் நிறுவனர்

U K ஹோம்ஸ் & பிளாட்ஸ், மதுரை – 625012 +91 99659 81810

**வளர்ச்சி பெறும் திருமங்கலம்**

- மெட்ரோ ரயில் முதல்கட்ட பணிகள்ஆரம்பம்
- ரயில்வே மேம்பாலம் முதல்கட்ட பணிகள் ஆரம்பம்
- அமையவிருக்கும் எய்ம்ஸ் அருகிலுள்ள டவுன்ஷிப் திருமங்கலம்
- எங்கள் மனைப்பிரிவில் இருந்து 6கி.மீ., தொலைவில் கப்பலூர் ZOHO IT கம்பெனி அமைகிறது.
- மனைபிரிவிலிருந்து சிறிது தொலைவில் மெட்ரோ ரயில் ஸ்டேஷன் அமையும் வாய்ப்பு.

*நாளிதழ்களில் வரும் தகவல்கள் படி.

முகவரி: P.K.N. வித்யாலயா பள்ளி(CBSE) எதிர்புறம், வடகரை, திருமங்கலம் – 625 706. பஸ் ரூட்: 37B / பஸ் ஸ்டாப்: PKN கல்லூரி

எங்கள் லே–அவுட், திருமங்கலம் நகர் பகுதியில் இருந்து 3 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.02.2024 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293  98409 60846 / 90479 50885

# UG CHEMI JAGSAN

# U G கெமி ஜாக்சன்



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009
E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



# வேல் மருத்துவமனை

## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

# கைத்தறியில் ஓர் புதுமை

## Electronic Jacquard



**Technical Details :**

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm









**Applications :**
• Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
• Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

# SRE CORPORATION

359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 46064, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org